குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**MC.No. 2/2026**

வழக்கு சாட்சி ம.சா. 2

2026ம் **ஜூன்** மாதம் 24 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 24 .06.2026

**குறுக்கு விசாரணை**

நான் சாட்சி மதிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிகையில் வழக்கறிஞர் சொல்லி தான் கையொப்பம் செய்தன என்றால் எனக்குத் தெரிந்ததை சொல்லி தான் அதில் கையொப்பம் செய்தேன். மனுதாரரும் எதிர்மனுதாரரும் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவர்கள் திருமணத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் இல்லை சென்றுள்ளேன். அந்த திருமணமானது மனுதாரருக்கு இரண்டாவது திருமணம் என்று சொன்னால் சரிதான். திருமணம் எங்கு நடைபெற்றது என்று சொன்னால் கூடுதுறையில் நடைபெற்றது அதற்கு நான் சென்றேன். எதிர்மனுதாரரின் முகவரி எனக்கு தெரியுமா என்று சொன்னால் முழுமையாக தெரியாது வட்டமலை அருகில் உள்ளார் என்று தெரியும். அவர்கள் வீட்டில் நடக்கக்கூடிய சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான் மனுதாரர் சொல்லி தான் எனக்கு தெரியும். எதிர் மனுதாரர் ஆடம்பரமாக செலவு செய்து வந்து வருகிறார் என்பதை எனது மனுவில் கூறியுள்ள நிலையில் அவர் எவ்வாறு ஆடம்பரமாக செலவு செய்து வருகிறார் என்று மனுவில் சொல்லியுள்ள நிலையில் எது மாதிரியான செலவு செய்கிறார் என்று சொல்லவில்லை என்றால் ச்ரிதான். எதிர்மனுதாரர் குடித்துவிட்டு தகராறு செய்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்று சொன்னால் தெரியாது மனுதாரர் சொல்லி தான் எனக்கு தெரியும். என்னுடைய மனுவில் நேரடியாக பார்த்தது போல் நான் சொல்லியிருந்தால் அது தவறுதான் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் எனது தோழி என்ற முறையில் மாதம் எவ்வளவு சம்பளம் வாங்கி வருகிறார் என்பது எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியும். வாரம் ரூபாய் 2000 முதல் 2500 சம்பளம் வாங்குகிறார். மனுதாரர்கள் மகன் தனியார் பள்ளியில் படித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அந்த கல்வி கட்டணத்தை எதிர்மனுதாரத்தான் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் குழந்தைகள் இருவரையும் எதிர்மனுதாரர் வார நாட்களில் அழைத்து சென்று பார்த்து

வருகிறார் என்று சொன்னால் சரிதான். குழந்தைகளை பார்த்து பராமரித்து வருவது மட்டுமல்லாமல் மனுதாரர்களுக்கும் செலவுக்கு பணம் கொடுத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மாதத்திற்கு முன்பாக குழந்தைக்கு காது குத்தி மொட்டை அடித்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது மொட்டை மட்டும்தான் அடித்து வந்தார்கள் கோயிலுக்கு சென்று வருவதற்கான செலவுகள் அனைத்தையும் எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல மனுதாரர் தான் செய்தார். இரண்டு மாதத்திற்கு முன்பு வாஷிங் மெஷின் மனுதாரர் வாங்கியுள்ளார் என்று சொன்னால் மனுதாரரின் தாயார் வாங்கிக் கொடுத்தார். எதிர்மனுதாரர் தான் வாஷிங் மெஷின் வாங்கி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. கடந்த இரண்டு வாரத்துக்கு முன்பாக மனுதாரர் தகப்பனார் அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்று சொன்னால் சரிதான். அந்த மருத்துவ சிகிச்சைக்கும் எதிர்மனுதாரர் தான் செலவுகளை கவனித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நானும் மனுதாரரும் ஒன்றாக வேலை செய்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய்யாக சாட்சிம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. எதிர்மனுதாரர் தகப்பன் என்ற ஸ்தானத்தில் குழந்தைகளையும், கணவர் என்ற முறையில் மனுதாரரையும் நல்ல முறையில் கவனித்து தான் வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.